# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 212/2017 | Village | : | |
| Prosecution witness | : | PW- 2 | Taluk | : | |
| Name | : | திரு.சத்யா | Occupation | : | |
| Husband Name | : | திரு. ரமேஷ் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 21.7.2025**

A1 absent. U/sec.355 BNSS petition filed and allowed. A2 present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது புதுகோட்டையில் வசித்து வருகிறேன். சம்பவத்தின்போது ராங்கியத்தில் வசித்து வந்தேன். நான் தற்போது வழக்கறிஞராக உள்ளேன். இறந்துபோன ரமேஷ் என்னுடைய கணவர் ஆவார். தஞ்சாவூர் யாகப்பா நகரில் உள்ள விக்னேஷ் ஏஜென்ஸியில் சூப்பர் வைசர் மற்றும் கலெக்சன் ஏஜெண்டாக வேலை பார்த்தார். 25.5.2017 அன்று காலை 9 மணிக்கு நான் ராங்கியத்தில் இருந்தபோது கணவர் வேலை பார்த்த விக்னேஷ் ஏஜென்சியிலிருந்து அதன் உரிமையாளர் மணிகண்டன் என்பவர் போன் மூலமாக என் கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்று உடனடியாக நேரில் வரச்சொன்னார். அந்த விஷயத்தை என் கணவரின் அண்ணனுக்கு என் போனிலிருந்து தகவல் சொன்னேன். அவர் வந்ததும் நானும்அவரும் சுமார் 12 மணிக்குள் விக்னேஷ் ஏஜென்சிக்கு போனோம். என் தாய்மாமா சரவணன் விக்னேஷ் ஏஜென்சியில் எலக்ட்ரிக்கல் பிரிவான தேவி ஏஜென்சியில் வேலை பார்த்தால் அவர் அங்கு இருந்தார் கடையின் ஓனர் மணிகண்டனும் அங்கு இருந்தார். சுரேஷ்குமார் என் அண்ணனும் அங்கு இருந்தார். 24.5.2017அன்று என் கணவரை கொலை செய்துவிட்டார்கள் என்று சொன்னார். அவர் ஏற்கனவே காவல்துறையில் புகார் கொடுத்திருப்பதாக சொன்னார். அங்கிருந்து மருத்துவகல்லூரி சவகிடங்கிற்கு போனோம். உடல்கூறாய்வு முடிந்து பிரேதம்

கொடுத்தார்கள். என்னுடைய மாமியாரிடமும் என்னிடமும் ஒப்படைத்தார்கள். போலிஸார் என்னிடம் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் கணவர் இறப்பிற்கு முன்பு பிரச்சனை இருப்பதாக நான் காவல்துறையில் சொன்னதன் அடிப்படையில் விக்னேஷ் ஏஜென்சி ஓனர் மணிகண்டனை 24.5.2017 முதல் 30.5.2017 வரை போலிஸார் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தாரா என்றால் இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.